பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

ம. இருதயதாஸ்

பெற்றுத்தரும்
வெளிநாட்டு உடனடி
வேலைவாய்ப்புகள்!

சவூதி, பேறூட், குவைத்
பணிப்பெண்கள்

ம. இருதயதாஸ்
96, 4-ஆம் குறுக்கு வீதி,
சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2/-

ம. இருதயதாஸின்

உடனடி வெளிநாட்டு
வேலைவாய்ப்புக் கையிருப்பு

பேறூட், சவூதி
ஆண்கள்: லேபரஸ்

ம. இருதயதாஸ்
96, 4-ம் குறுக்குவீதி,
சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 யாழ்ப்பாணம் விபவ ஞு கார்த்திகை மீ 15 உ. புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ற. ஆகிர் பிறை 19 (30-11-1938) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 4

## தென்னிலங்கையில் நிலைமை மிக மோசம்!

### 24 மணி நேரத்தில் 16 பேர் படுகொலை

கொழும்பு நவம்பர் 30

தொடர்ந்து அதிகரித்து வரும் வன்செயல் சம்பவங்கள் காரணமாக தென்னிலங்கையில் சட்டம், ஒழுங்கு, சகஜ வாழ்க்கை நிலைமை மிக மோசமடைந்திருக்கிறது.

அங்கு கடந்த 24 மணிநேரத்தில் இடம்பெற்ற வன்செயல் சம்பவங்களில் 16 பேர் உயிரிழந்தனர்.

இதேசமயம் ஜனாதிபதித் தேர்தலை குழப்பும் நோக்குடன் தென்பகுதித் தீவிரவாதிகள் மும்முனை சதித்திட்டம் ஒன்றை தீட்டி செயற்பட்டுவருவதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

தெனியாய, ஹபரதுவை, மாத்தறை, மத்துகம உடுபொக் ஆகிய இடங்களில்இடம்பெற்ற வன்செயல் சம்பவங்களில் 11 சிங்களவர்கள் உயிரிழந்ததாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

மாத்தறையில் ஆஸ்பத்திரி ஊழியர் ஒருவர் தீவிரவாதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரைச் சுட்ட தீவிரவாதியை பொதுமக்கள் வளைத்துப் பிடித்து அடித்துக் கொன்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்பாவெல, மிதிகம, வெலிகம ஆகிய இடங் (6ஆம் பக்கம் பார்க்க)

### தபால் பொதிகள் அனுப்பப்பட்டன

யாழ்ப்பணம், நவ. 30

வவுனியா, கிளிநொச்சி மாவட்டத்துக்கான தபால்பொதிகள் யாழ். தபாலகத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டன.

எனினும் வவுனியாவுக்கு அப்பால் உள்ள இடங்களுக்கான தபால் பொதிகள் தொடர்ந்தும் யாழ் தபாலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன. (உ-10)

### மாகாண ஆளுநர் யார்?

கொழும்பு, நவ 30

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக திரு திஸ்ஸ ஜயக்கொடி அல்லது திரு.சார்ள்ஸ்அபயசேகரா நியமிக்கப்படலாம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது.

திரு. திஸ்ஸ ஜயக்கொடி சென்னையில்பிரதி இலங்கைத் தூதராகப் பணிபுரிந்தவர். தற்சமயம் மாகாணசபைகள் அமைச்சின் செயலாளராக அவர்பணிபுரிகிறார். (உ-எ)

### லயனலும் மறுப்பு

வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் பதவியை ஏற்க திரு. லயனல் பெர்ணாண்டோ மறுத்துவிட்டார்.

திரு. பெர்ணாண்டோ யாழ்ப்பாணம் மற்றும் திருமலை அரச அதிபராக பணிபுரிந்தவர்.

தற்சமயம் சிவில் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளராக பதவி வகிக்கிறார்.

பதவி ஏற்க மறுக்கும் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் ஊடாக ஜனாதிபதிஜெயவர்த்தனவுக்கு தான் அனுப்பிவைத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

கவனர்பதவி முன்னர் முன்னாள் பிரதி நீதி அமைச்சர் ஷெல்டன் ரணராஜாவுக்கு வழங்கப்படவிருந்தது. அவரும் அப்பதவியை ஏற்க மறுத்து விட்டார். (உ-எ)

### தயானுக்கு எதிரான வழக்கு வாபஸாகும்

கொழும்பு, நவ. 30

அரசுக்கு எதிராக சதி செய்ததாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் திரு. தயான் ஜெயதிலகா டி சில்வா உட்பட நான்கு எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் வாபஸாகும் என்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

திரு தயான் ஜெயதிலக டி சில்வா, வடக்கு கிழக்கு மாகாண அமைச்சரவையில் ஓர் அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திரு தயான் ஜெயதிலக டி. சில்வா, வழக்கில் முதலாவது எதிரி. அவருக்கும் 5, 6, 7 ஆம் எதிரிகளுக்கும் எதிரான குற்றச்சாட்டுக்களை விலக்கிக் கொள்ள சட்டமா அதிபர் முடிவு செய்து இருப்பதாகவும்—

அதற்கு மேற்படி எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என் (6ஆம் பக்கம் பார்க்க)

### கஷ்டத்தில் உள்ள நிதிநிறுவனங்களில் வைப்பிட்டோருக்கு விரைவில் மீளளிப்பு

#### புதிய கவர்னர் உறுதி

கொழும்பு நவ 30

நிதிக்கஷ்டத்தில் உள்ள நிதிநிறுவனங்களில் பணம் வைப்புச் செய்தவர்களுக்கு விரைவில் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பதாக மத்திய வங்கியின் புதிய கவர்னர் டாக்டர் நெவில் கருணதிலக உறுதியளித்திருக்கிறார்.

''மத்திய வங்கியுடன் தொடர்பு இன்றிநான்கு வருடங்கள் இருந்திருக்கிறேன். அதனால் இப்பிரச்சினை குறித்து நான் தீர ஆராய வேண்டியுள்ளது. இருந்தாலும்பாதிக்கப்பட்ட பண வைப்பாளருக்கு விரைவில் நிவாரணம் கிடைக்கச் செய்வேன்''—இப்படி கவர்னர் டாக்டர் கருணதிலக தெரிவித்தார். [உ-எ]

### இளைஞன், யுவதி சடலமாக யாழ். ஹோட்டலில் மீட்பு

யாழ்ப்பாணம், நவ 30

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள சுற்றுலாப் பயணிகள் விடுதியின் அறை ஒன்றில் இருந்து ஒரு இளைஞனினதும், ஒரு யுவதியினதும் சடலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன.

27 வயதுடைய இளைஞன் ஒருவனினதும், 20 வயதுடைய யுவதி ஒருவரினதும் சடலங்களே மீட்கப்பட்டன.

அந்த அறையில் இருந்து கிருமி நாசினிப் போத்தல் ஒன்றும் மீட்கப்பட்டு யாழ் பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இவர்களது மரணம் தொடர்பான விசாரணைகள் நேற்று யாழ் ஆஸ்பத்திரிப் பொலீஸ் பிரிவில் நடைபெற்றன. (உ-10)

### இணுவில் பகுதியில் இளம்பெண் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், நவ 30

இணுவில் ஆஸ்பத்திரிக்குச் சமீபமாகச் சூட்டுக்காயங்களுடன் இளம்பெண் ஒருவரின் சடலம் நேற்றுக் கிடக்கக்காணப்பட்டது.

கொலையுண்டவர் குப்பிளானைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவருக்குத் தண்டனை வழங்கப்பட்டது குறித்துப் பிரசுரம் ஒன்றும் சடலத்துக்கு அருகில் காணப்பட்டது.

### நீர்கொழும்பு அருகே யாழ் தனியார் பஸ் மீது சூடு! எட்டுப் பயணிகள் காயம்!!

கொழும்பு, நவ. 30

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற தனியார் பஸ் ஒன்றின் மீது வான் ஒன்றில் வந்த இனந் தெரியாத கோஷ்டி ஒன்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது இதில் இரு பெண்கள் உட்பட எட்டுப் பேர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானது. இரவு சுமார் பத்துமணியளவில் நீர்கொழும்புக்குச் சமீபமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பஸ்ஸைத் தொடர்ந்து வான் ஒன்றில் வந்த இனந்தெரியாதகோஷ்டியினர் பஸ்ஸை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து சம்பந்தப்பட்ட வான் பஸ்ஸை முந்திக் கொண்டு சென்று விட்டது.

இச்சம்பவத்தில் காயமடைவர்கள் நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில்சேர்க்கப்பட்டிருந்தனர். (உ-ஐ)

### முச்சந்தி முரளி



வாங்கி வாங்கி வங்குரோத்தானதிலை எங்கடை நாடு கின்னஸ் சாதனை புரிஞ்சிட்டுது கண்டியளே.....!

### இலங்கைக்குக் கடன் 20 ஆயிரம் கோடி ரூபா!

கொழும்பு, நவம்பர் 30

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இலங்கை அரசு பட்டிருக்கும் கடன் தொகை எவ்வளவு?

1988 ஆம் ஆண்டு ஜூன் வரையுள்ள கடன் எவ்வளவு என்பதை மத்திய வங்கியின் ஆகப்பிந்திய புள்ளிவிவர அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

ரிசர்வ் நிதியில் ஆக 474 கோடி 24 லட்சத்து 24ஆயிரத்து 823ரூபா மட்டுமே உள்ளது.

இதைக்கழித்துப் பார்த்தால் இலங்கை அரசுக்கு நிகர வெளிநாட்டு, உள்நாட்டுக் கடன்கள் ரூபா 192, 80, 42,73, 097 (19ஆயிரத்து 280கோடி 42லட்சத்து 73ஆயிரத்து 97 ரூபா) என்று மத்தியவங்கி அறிக்கை தெரிவிக்கிறது. (உ-எ)

### முத்திரைக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம் நவ 30

வடபகுதியில் முத்திரைகள், வான் கடிதங்கள் என்பவற்றிற்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

### சுபநேரம்

30 - 11 - 1988
புதன்கிழமை
சுபநேரம்:-
4-49 முதல் 6-14வரை
ராகுகாலம்:-
12-14 முதல் 1-44வரை
ஆறுமுகநாவலர் குரு பூசை

### மில்கள் மின்னைப் பாவித்தால் மின் விநியோகத்தில் மேலும் கட்டுப்பாடு

#### வரலாம் என எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ 30

வடபகுதியில் அத்தியாவசிய சேவைகளுக்காக ஜெனரேட்டர் மூலம் வழங்கப்பட்டு வரும் மின்சாரத்தை ஒரு சில மில்களும், தொழிற்சாலைகளும் தொடர்ந்து உபயோகித்து வருவதாகத் தெரிவிகப்படுகிறது

இந்த நிலை தொடருமானால் இந்த ஜெனரேட்டர் மின்சாரத்தையும் ஒன்று விட்டு ஒரு நாள் மாத்திரமே விநியோகிக்கும் நிலை உருவாகும்.

பிராந்திய மின்பொறியியலாளர் திரு. முத்துரெட்ணனந்தம் இப்படித் தெரிவித்தார்

மின் விநியோகத் தட்டுப்பாட்டை அடுத்து மில்கள் மற்றும் தொழிற் (6ஆம் பக்கம் பார்க்க)

### மாணவர்கள் விடுவிப்பு

குருநகர், நவ 30

கடந்த சனிக்கிழமை யாழ்- பேராலயப்பகுதியில் நடைபெற்றசூட்டுச் சம்பவத்தை அடுத்து அமைதிப் படையினரால் விசாரணைக்குக் கூட்டிச் செல்லப்பட்ட சம்பத்திரிசியார் கல்லூரி விடுதி மாணவர்களில் இருவர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

மற்றும் சில விடுதி மாணவர்கள் இன்றுவிடுதலை செய்யப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-51)

### மதிற்சுவர் விழுந்து சிறுவன் பலி!

மதிற் சுவர் இடிந்து வீழ்ந்தபோது அதில் நசியுண்டு பத்து வயதுச் சிறுவன் ஒருவன் மரணமானான்.

தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மாணவனானகிருபாகரன் பிரதீபன் என்பவனே அந்தச் சிறுவனாவான். (ஒ-69)

### நாடாளுமன்றம் கலைப்பு; 10 ஆம் திகதி அறிவிப்பு?

கொழும்பு நவ. 30

நாடாளுமன்றம் அநேகமாக எதிர்வரும் இருபதாம் திகதி கலைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாடாளுமன்றம் கலைக்கப்படுவது தொடர்பான அறிவித்தல் எதிர்வரும் பத்தாம் திகதி வெளியிடப்படலாம் எனவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன (உ-ஐ)

### சட்டமா அதிபருடன் தூதுவர் டிக்ஸிற் பேச்சு

கொழும்பு, நவ.30

இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் கடந்த வியாழன் சட்டமா அதிபர் சுனில் டி சில்வாவை அவரின் அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

பிரிகேடியர் பஞ்சித் சிங்கிற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆள் கொணர்வு மனு தொடர்பாக இச் சந்திப்பு இடம்பெறவில்லை என்று அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

திரு. டிக்ஸிற் சந்திப்பு பற்றி விவரம் கூறசட்டமா அதிபர் மறுத்துவிட்டார்.

மேற்படிவழக்குதொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு சட்டமா அதிபருக்கு மேன் முறையீட்டு நீதிமன்றம் இம்மாதம் 19ஆம் திகதி உத்தரவு விட்டிருந்தது தெரிந்ததே. (உ-எ)

### வேலை இல்லாதோருக்கு மீண்டும் வேலைவாய்ப்பு

கொழும்பு நவ 30

தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக வேலை நீக்கஞ் செய்யப்பட்ட அரசு ஊழியர்களை—

வேலைக்கு சமுகமளிக்கத்தவறும் அரசு ஊழியர்களின் இடத்துக்கு நியமிக்க அரசு முடிவு செய்திருக்கிறது.

அமைச்சு வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

1980 இல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வேலை இழந்த அரசு ஊழியருக்கு எக் காரணங்கொண்டும் வேலை வழங்கப்படமாட்டாது என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசின் இம் முடிவினால் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக வேலை நீக்கஞ் செய்யப்பட்ட சுமார் 6 ஆயிரம் அரச ஊழியர் புதிய ஊழியராகக் கருதப்பட்டு நியமனம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசின் தீர்மானம் பொது நிர்வாகத்துறை அமைச்சுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுவிட்டது.

இதற்கு அரசுத்திணைக்களத் தலைவர்கள் பலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

குற்றவாளிகளாகக் காணப்பட்டு வேலையில் (6ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட சம்பளம் டிசம்பரில் கிடைக்கும்

யாழ்ப்பாணம், நவ. 30

ஆசிரியர்களுக்கான டிசம்பர் மாத சம்பளம் அதிகரிக்கப்பட்ட புதிய திட்டப்படி வழங்கப்படும்.

சகல அரசஊழியர்களுக்கும் கடந்த நவம்பரிலேயே சம்பளம் அதிகரிக்கப்பட்டது. எனினும் யாழ் ஆசிரியர்களுக்கு நவம்பர் மாத சம்பளக் கொடுப்பனவில் இந்த அதிகரிப்புத் தொகை சேர்க்கப்படவில்லை.

தற்போது டிசெம்பர் மாத சம்பளத்தை அதிகரிக்கப்பட்ட திட்டப்படி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இந்தச் சம்பளத்துடன் நவம்பர் மாத அதிகரிப்புக்கான நிலுவையும் சேர்த்து வழங்கப்படும்.

டிசம்பர் மாத சம்பளம் எதிர்வரும் 8 ஆம் திகதியே வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தகவல்களை யாழ். கல்வித்திணைக்கள பிரதம கணக்காளர் திரு. ஆர். சுகுணதீரன் தெரிவித்தார். (உ-9)

### இந்தியா மண் கவ்வியது! நியூஸிலாந்திடம் தோல்வி!!

பம்பாய் நவ 30

இரண்டாவது டெஸ்டில் நியூசிலாந்து, இந்தியாவை 136 ஓட்டங்களால் தோற்கடித்தது.

7 விக்கட்டுக்களை இழந்து 134 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஐந்தாவது நாளான நேற்று இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடர்ந்தது.

21 நிமிடங்களில் எஞ்சிய மூன்று விக்கட்டுக்களையும் இழந்து இந்திய அணி 8 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

இந்த ஆட்டத்தில் முதலில் ஆடிய நியூஸிலாந்து அணி முதலின் இன்னிங்ஸில் 236 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 279 ஓட்டங்களையும் எடுத்தது.

இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 234 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸில் 145 ஓட்டங்களையும் எடுத் (6ஆம் பக்கம் பார்க்க)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள HONDA CB 125 TWIN (SPORTS MODEL) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு தொடர்பு:- செ நாகேந்திர ராசா, சோதிட திருமண சேவை இல. 6 நவீன சந்தை (மேல் மாடி) யாழ்ப்பாணம்

(8004)

Hoover பொலிசர் Car Fan 24W - 2, வெள்ளை இன நாலுமாத ஆண் பொமெனேரியன் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க. சாந்தகுமார், No 8. புகையிரத நிலைய வீடுதி, ஸ்ரான்லிவீதி யாழ்ப்பாணம் ஆயுள்வேத கல்லூரிக்கு முன்பாக

(8002)

## நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள் (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம், 146. நவீன சந்தை, யாழ்ப்பாணம்

(C/357)

## கோழிக்குஞ்சு விற்பனை

Hisex Goldencomet பிறவுண் சேவற் குஞ்சுகள் பேட்டுக்குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், கறுப்பு சேவற் குஞ்சுகள், Hyline வெள்ளை. கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் வெள்ளிக்கிழமை 2 12-88 இல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிரதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில்

(8003)

Hy Line கறுப்பு வெள்ளை 10 நாள் பேட்டுக் குஞ்சுகளும் Three Acre Farm 1 நாள் புறொயிலர் குஞ்சுகளும் விருப்பில் உள்ளது "A J S" FarmNo 45, கொழும்புத்துறை வீதி, (சந்தன மாதா கோவில் அருகாமை) சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் 'லீலாபதி' கண்டிவீதி மிருசுவில். (7751)

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள். சிவப்பு சேவற் குஞ்சுகள், Broiler குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் Hvline கறுப்பு வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்குப் படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

(7686)

## இறைச்சிக்கோழி விநியோகம்

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள் சேவற்கோழிகள். சூப் குஞ்சுகள், விழுத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7685)

## கோழிக் குஞ்சு விற்பனை

நன்கு பராமரிக்கப்பட்ட 2 மாத வயதுடைய பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் ஒரு மாத வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகள் மொத்தமாக வும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 23, கடற்கரை வீதி, ஈச்சமோட்டை. (8007)

## தேவை

வர்த்தகக் கடை ஒன்றிற்கு ஆண் விற்பனையாளர் உடனடியாகத் தேவை வயது 15 க்கும் 30க்கும் இடையில் இருத்தல் வேண்டும் தொடர்பு:- சபாறேஸ் சென்ரர். பிரதான வீதி, அச்சுவேலி. (7950)

## கொம்பஷிட்டர் தேவை

ஓரளவு ஆங்கில அறிவுடைய கொம்பஷிங் தெரிந்த அல்லது பயில ஆர்வமுள்ள யவதிகள் தேவை. 05-12-88 க்கு முன் சுயசமூலம் மட்டும் விண்ணப்பிக்கவும். "வீம" 104 பருத்தித்துறைவீதி. ஆனைப்பந்தி, யாழ்நகர். (7752)

## தவறிவிட்டது

ஆறுமுகம் யோகேஸ்வரி ஆகிய எனது அடையாள அட்டை இல 587562952 V நல்லூர் கோவிலடியில் 25 11 88 அன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும், தகுந்த சன்மானம் வழங்கப்படும். (7755)

ம. ஆறுமுகநாதன் ஆகிய எனது அடையாள அட்டை இல 580742476 V விலாசம்: சரணவ ய் வடக்கு. கரவெட்டி நெல்லியடியில் 27-11-88 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நாகமுத்து கச்சலாயர் வளவு, நவுண்டில் கரவெட்டி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும் (7849)

திருமதி கணேசு தங்கமலர் ஆகிய எனது அடையாள அட்டை யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (8006)

## HAND PUMP

மின்சாரம் இல்லாத நேரத்தில் தண்ணீர் பெறமுடியாத கஷ்டத்தை நீக்குவதற்கு குழாய்க் கிணறுகளுக்கு கைப்பம்புகள் (Hand Pumps) உடன் பொருத்திக் கொடுக்கப்படும். இவை சிக்கனமானவையும், எளிமையானவையும். (Piston Type) ஐந்து வயதுக் குழந்தையால் கூட இயக்க முடியும் தொடர்பு; றெக்ஸ் எஞ்ஜினியர்ஸ் பருத்தித்துறை வீதி: கோப்பாய். (8005)

## காணவில்லை

எனது M D 90 இல. 101 ஸ்ரீ 6554 மோட்டார் சைக்கிள் ஆஸ்பத்திரி வீதியில் காணாமல் போய்விட்டது இனக் கண்டோர் தயவு செய்து ஸ்ரீதேவி ஸ்ரோஸ் 102, பழைய பூங்கா வீதி யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு தகவல் தெரிவிக்கவும் சன்மானம் வழங்கப்படும் (8008)

## Spoken English

புதிய பிரிவு ஆரம்பம் 29-11-88 செவ்வாய் வியாழன் நாட்களில் நேரம் 2 30 முதல் 4 மணிவரை S B Iyar 12 வைமன் வீதி, நல்லூர். (7831)

## விசேட பயிற்சி வகுப்புக்கள்

றேடியோ ரெலிவிஷன் டெக், வயறிங், வெல்டிங், பிளம்பிங், றீவைண்டிங், குளிரியல் மோட்டோ மெக்கானிசம் ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன. தொடர்பு; Nesta Technical Institute. 59 Station Road. Jaffna. (7829)

## கண்காட்சி

மானிப்பாய் நவ 30 தொடர்கல்வி நிறுவனத்தின் பாலர்கழக ஆசிரியர்களாகப் பயிற்சி பெறும் பயிலுநர்களின் கைவண்ணக் கண்காட்சி ஒன்று நாளையும் நாளை மறுதினமும் காலை 9 30 மணி தொடக்கம் மாலை 4 00 மணிவரை உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது (ச-90)

## சந்தைக் கட்டடம் நிர்மாணம்

ஊர்காவற்றுறை, நவ. 30

இதுவரை காலமும் திறந்த வெளியில் மரக்கறி வியாபாரம் செய்து வந்த புளியங்கூடல் சந்தை வர்த்தகர்களுக்கு புதிய சந்தைக் கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் விசேட ஆணையாளரும் உதவி அரசாங்க அதிபருமான திரு. எஸ் எஸ் சிவரத்தினம் இந் நிர்மாண வேலைக்காக சபை நிதியிலிருந்து ஐம்பதாயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகத் தெரிய வருகிறது. (ஒ-16)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
நாகமுத்து சிவப்பிரகாசம்

(முன்னாள் செக்கிராவ P சுப்பிரமணியம் சகோதரர்கள் பங்காளரும், கெசகிராவ சமாதான நீதிவானும். தற்போது சண்டிலிப்பாய் சம்பாள் அரிசி ஆலை உரிமையாளருமாவார்)

ஆண்டவன் படைப்பு: 5 - 2 - 1918

ஆண்டவன் அழைப்பு: 3 - 11 - 1986


திதி: 11. 11. 1988

பாருத அன்போடும், மட்டற்ற மகிழ்வோடும் சிற பெய்தி, பேரோடு புகழ் பெற்று மற்றோர் மதிக்க பண்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எங்களையும் வாழ வைத்த அன்புத் தெய்வமே! எங்கள் நெஞ்சில் நினைவுள்ள வரை தாங்கள் நிலைத்திருப்பீர்கள். தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள்,
பெருமக்கள்.

திருமதி சிவபாக்கியம் சிவப்பிரகாசம்.
சீரணி நாகம்மாள் கோயிலடி,
சண்டிலிப்பாய். (7970)

## விற்பனைக்கு



லங்கா அசோக்லேலண்ட்டிற்கு
உரிய வில்லுத்தகடு தனியாகவும்
செற்றுக்களாகவும் (கனம்மிக்கது)
எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

# பிள்ளையார் ஸ்ரோர்ஸ்

31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/819)

## சிறப்பாக நடைபெற்றது

யாழ்ப்பாணம். நவ.30

திருமூலர் குருபூசை அண்மையில் சுந்தரர் மடத்திலுள்ள திருக்குறள் மன்ற பணிமனையில் மன்றத்தலைவர் திரு. ஏ என். பொன்னாதன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது

திருக்குறள், திருமந்திரம் சம்பந்தமான காலாண்டு சஞ்சிகை ஒன்றை எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று வெளியிடுவதுஎன குருபூசை வைபவத்தின் போது தீர்மானிக்கப்பட்டது. (ஓ ச)

## வாடகைக்கு கட்டிடம் தேவை
## சுகாதார சேவைகள் திணைக்களம்

யாழ்ப்பாண நகரசபை எல்லைக்குள் 1½ அல்லது 2 கிலோ மீற்றர் சுற்று வட்டத்தில் அரசாங்க அலுவலகமாகவும் மார்பு நோய் சிகிச்சை நிலையமாகவும் பாவிப்பதற்கு தகுந்த 2500 சதுர அடிக்குக் குறையாத இடவசதியுள்ள, குழாய் நீர். மின்சாரம், மலசலகூடம் ஆகிய வசதிகளுடன் கட்டிடம் வாடகைக்கு உடனடியாகத் தேவைப்படுகின்றது.

மேலும் விபரங்களுக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

பிராந்திய சுகாதார
சேவைகள் பணிப்பாளர்.

57. விக்ரோறியா வீதி,
யாழ்ப்பாணம்,
9-11 88

(C/817)



# இன்று மங்களகரமான திறப்பு விழா

எமது வாடிக்கையாளர்களின்
நலன் கருதி
சகலவிதமான
* மாபிள் * பீங்கான்
வகைகளைப் பெற்றுக்கொள்ள
சுன்னாகத்தில் இருக்கும் சிறந்த
ஒரே ஸ்தாபனம்

## சுன்னாகம் செரமிக் சென்ரர்

எமது ஸ்தாபனத்திற்கு
வருகைதந்து சிறப்பிக்கும்
வண்ணம் அன்புடன்
அழைக்கின்றோம்.

## சுன்னாகம் செரமிக் சென்ரர்

116, K K S. வீதி, சுன்னாகம்.
(பழைய பொலிஸ் நிலையம் முன்பாக)

(7158)

# வலி-கிழக்கு பிரதேச சபை - நீர்வேலி
# கேள்வி அறிவித்தல் - 1989

வலி-கிழக்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள் இறைச்சிக் கடைகள், கடைகள் ஆகியவற்றை 1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 1989 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு/விற்பனவு செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 14-12 88ஆம் திகதி நண்பகல் 12மணி வரை வலி-கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் யாவும் அப்பகுதி பிரதேச சபை உபஅலுவலகங்களின் பொறுப்பதிகாரியால் கேள்வி வைப்புப் பணம் கேள்விப்பத்திரப் பணம் செலுத்தியதின் பேரில் 09-12 88ஆம் திகதி நண்பகல் 12மணி வரை வழங்கப்படும் பூர்த்தி செய்யப்பட்ட மூலப் பிரதியை "விசேட ஆணையாளர் வலி-கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகம். நீர்வேலி" எனவும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர். யாழ்ப்பாணம்' எனவும் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'இன்ன' குத்தகைக்கான கேள்வி' எனக்குறிப்பிடுதல் வேண்டும் கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் அடையாள அட்டை காண்பித்தல் வேண்டும்.

தேர்வு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கமைய குத்தகையை எடுத்து நடத்துதல் வேண்டும் நிபந்தனைகளில் ஏதாவது ஒன்றை மீறுமிடத்து எதுவித நட்டஈடுமின்றி குத்தகை உரிமையை ரத்துச்செய்யும் அதிகாரம் விசேட ஆணையாளருக்கு உண்டு வேறு விபரங்கள் அறிய விரும்பின் அந்தப் பிரதேச சபை உப அலுவலகங்களில் பெறறுக்கொள்ளலாம்.

க. குலேந்திரா
விசேட ஆணையாளர்
வலி-கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம். நீர்வேலி.

வலி கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
நீர்வேலி

| உப அலுவலகம் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பீட்டுத் தொகை | கேள்வித் தொகையுடன் செலுத்த வேண்டிய மாதவாடகை |
|---|---|---|---|---|
| **உரும்பிராய் ஊரெழு** | | | | |
| 1. உரும்பிராய் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 25 00 | 100.00 | 14400 00 | |
| 2 உரும்பிராய் மாட்டிறைச்சிக்கடை | 25 00 | 100 00 | 9000 00 | |
| 3 ஊரெழு மாட்டிறைச்சிக்கடை | 25 00 | 100.00 | 6000 00 | |
| 4 உரும்பிராய் மத்திய சந்தை 3 | 25 00 | 100 00 | 27600 00 | |
| 5. ஊரெழு சந்தை | 10 00 | 50 00 | 600.00 | |
| **நீர்வேலி** | | | | |
| 1. நீர்வேலி வடக்குப் பொதுச் சந்தை | 10 00 | 50 00 | 1080 00 | |
| 2 நீர்வேலி மத்திய சந்தை | 10 00 | 50.00 | 180 00 | |
| 3 நீர்வேலி உபஅலுவலக வளவு | 10 00 | — | 90.00 | |
| 4 நீர்வேலி ஆட்டிறைச்சிக்கடை | 20 00 | 100.00 | 1200 00 | |
| 5. நீர்வேலி மாட்டிறைச்சிக்கடை | 20.00 | 100 00 | 2400.00 | |
| **அச்சுவேலி** | | | | |
| 1. அச்சுவேலிப் பொதுச்சந்தை | 50.00 | 500 00 | 62500 00 | |
| 2 அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை | 50.00 | 500 00 | 66000 00 | |
| 3. அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 25 00 | 100 00 | 5700 00 | |
| 4. வளலாய் / தம்பாலை பொதுச்சந்தை | 10.00 | 50 00 | 825.00 | |
| **புத்தூர்** | | | | |
| 1. புத்தூர் மத்திய சந்தை | 50 00 | 100.00 | 8400 00 | |
| 2 புத்தூர் மத்திய சந்தை மாட்டிறைச்சிக்கடை | 50 00 | 160.00 | 3600 00 | |
| 3. புத்தூர் உப அலுவலக சிற்றுண்டிச்சாலை | 25 00 | 100 00 | 2500.00 | |
| 4. ஆவரங்கால் மரக்கறிச்சந்தை | 25 00 | 100.00 | 12 0.00 | |
| 5 ஆவரங்கால் மீன் சந்தை | 25.00 | 100.00 | 2400.00 | |
| **கோப்பாய்** | | | | |
| 1. கோப்பாய் மீன் சந்தை | 25.00 | 100 00 | 3600 00 | |
| 2 இருபாலை மீன் சந்தை | 25.00 | 100 00 | 14 0 00 | |
| 3. இருபாலை ஆட்டிறைச்சிக்கடை | 50 00 | 100.00 | 5000 00 | |
| 4. இருபாலை மாட்டிறைச்சிக்கடை | 20.00 | 100.00 | 2000.00 | |

(C-818)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச ஊழியருக்கு நஷ்டஈடு

கொழும்பு, நவ. 30 1987ஆம் ஆண்டு ஜூலை ஆகஸ்ட் மாதங்களிலும் அதன் பின்னரும் தீவிரவாத நடவடிக்கைகள் காரணமாக வீடுகளையும், மற்றும் உடைமைகளையும் இழந்த அரச ஊழியருக்கு ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை நஷ்டஈடுத் தொகையாக வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ஜெயவர்த்தன சமர்ப்பித்த ஆலோசனையை அடுத்தே மேற்படி தீர்மானம் அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்டது.

பாதிக்கப்பட்ட அரச ஊழியருக்கு நிவாரணம் வழங்கும் வகையில் இது வரை எந்த ஒரு உதவித் திட்டமும் இல்லாமையினால் இவ்வாறான சந்தர்ப்பங்களில் தமது இழப்பீடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் மேற்படி நஷ்டஈடு வழங்குவது மிக அவசியமானது என்றும் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட அரச ஊழியருக்கு சேத மதிப்பீட்டின் அடிப்படையில் இந்த நஷ்டஈட்டுத் தொகை வழங்கப்படும். இதற்கான விண்ணப்பங்களை புனர்வாழ்வு அமைச்சுக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## ● அவர்களுக்கு ஏற்பட்ட சோதனை!

குருநகர், நவ. 30 மீன், இறால் கடல் தொழில் உபகரணங்களுடன் கூடிய வாகனங்கள் படையினரால் தடுத்து வைக்கப்பட்டன.

கடலுக்குச் சென்று மீண்ட தொழிலாளர் மட்டும் வீடுகளுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை மணியம் தோட்டம் பகுதியில் நடைபெற்றது.

காலை 11 மணியளவிலேயே வாகனங்கள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டது (ஒ-51)

இராமநாதன்

# நுண்கலைக் கல்லூரிக்கு ரூ.2கோடிசெலவில்கட்டடங்கள்

## ஜனவரியில வேலைகள் ஆரமபம்

யாழ்ப்பாணம் நவ 30 இராமநாதன் நுண்கலைக் கல்லூரிக்கு இரண்டு கோடி ரூபா செலவில் புதிய கட்டடங்கள் அமைக்கப்படஇருக்கின்றன.

எதிர்வரும் ஜனவரி மாதம் புதிய கட்டட நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படும்

அடுத்த வருடம் சம்பந்தப்பட்ட நிர்மாண வேலைகளுக்காக அறுபது லட்சம் ரூபா செலவிடப்படும்.

எஞ்சிய தொகை 1990 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து கட்டட வேலைகளுக்காக செலவிடப்படும்.

புதிய கட்டடங்கள் பூர்த்தி செய்யப்பட்டதும் இராமநாதன் கல்லூரிக்கு வழங்கப்படும். (ஒ-ஐ)

## பாடசாலை வரலாற்று நூல்

மானிப்பாய், நவ. 30 மானிப்பாய் வட்டாரப் பாடசாலைகளின் வரலாற்றை பலரும் அறிய வைக்கும் நோக்குடன பாடசாலை வரலாற்றுத் தொகுப்பு ஒன்றினை வெளியிடுவதற்கான முயற்சியில் மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் ஈடுபட்டுள்ளார். (ச-90)

## கல்முனையில் ஸ்ரீ ல.சு.க காரியாலயங்கள்

கல்முனை, நவ 30 எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலையொட்டி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்காரியாலயங்கள் அம்பாறை மாவட்டத்தில் இயங்கத் தொடங்கியுள்ளன.

இம்மாவட்டத்திலுள்ள பெரும்பாலான முஸ்லிம் கிராமங்களில் ஸ்ரீ ல. சு. கட்சி தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் படங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

இதேவேளை ஸ்ரீமாவோ ஜனாதிபதியானால் மக்கள் எலும்புக் கூடுகளாகி விடுவார்கள் என்பதை எடுத்துக்காட்டும் மனித எலும்புக் கூடும் ஸ்ரீமாவோவும் உள்ள படங்களும் எதிர் அணிகளால் ஒட்டப்பட்டுள்ளது. (இ-84)


## உதவி ஆங்கில ஆசிரியர் தெரிவு

1989 ஜனவரி பிற்பகுதியில் நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சைக்கான

### 1 மாத துரித பயிற்சி வகுப்புகள்

முன்னணி ஆசிரியர்களின் இணைந்த சேவை:

திரு. T. N. பஞ்சாட்சரம் - திரு. K. சபாநாயகம் - திரு. S. மூர்த்தி

### 3ஆவது பிரிவு ஆரம்பம் 2-12-88

- ✶ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
- ✶ கடந்தகால (82, 83, 84, 87) வினவிடைப் பயிற்சிகள்.
- ✶ விரிவுரைகள் - திங்கள், புதன், வெள்ளி
- ✶ கட்டணம் ரூபா 150.00 (முழுப்பயிற்சிக்கும்)

விபரங்களுக்கு:- தொடர்பு காலை 8.00 மணிமுதல் 12.00 மணிவரை

**அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்**

101/10, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.

(மக்கள் வங்கிக்கருகாமையில்) (C-811)



# உடனடி வேலைவாய்ப்பு

## சவூதி அரேபியா S. O. M. C

பல்கலைக்கழகம் ஆஸ்பத்திரி } இவ்விரண்டிலும் வேலைவாய்ப்பு பிற்கு உடனடி ஆள் தேவை.

| | | | சம்பளம் |
|---|---|---|---|
| 1. | சுத்திகரிப்பாளர் (Cleaners) | — 400 பேர் | 400 SR |
| 2. | கனரக வாகனச் சாரதிகள் (Heavy Vehicle Drivers) | — 15 பேர் | 750 SR |
| 3. | சாதாரண வாகனச் சாரதிகள் (Light Vehicle Drivers) | — 40 பேர் | 600 SR |
| 4. | Heavy Equipment Operators (Cutterpiller, Buldozer Operators) | — 16 பேர் | 750 SR |
| 5 | மோட்டார் வாகனங்கள் பழுதுபார்ப்பவர்கள் (Auto Machanic) | — 10 பேர் | 800 SR |
| 6. | மோட்டார் வாகன வயரிங் செய்பவர்கள் (Car Electrician) | — 5 பேர் | 800 SR |
| 7. | Leadman (Plumbing, Machanic Eleetric Wiring) (குழாய் பொருத்துனர், மெக்கானிக், மின்சார வயறில் இவைகளில் கொஞ்சம் தெரிந்தவர்களாக இருத்தல் வேண்டும்) | — 10 பேர் | 500 SR |
| 8. | Plumber (குழாய் பொருத்துனர்) | — 10 பேர் | 650 SR |
| 9. | Boiler Technician | | 1000 SR |
| 10. | Electrician | — 10 பேர் | 650 SR |
| 11. | சுத்திகரிப்பாளர் (பெண்கள்) Cleaners (Hospital) வயதெல்லை பெண்களுக்கு 30—45 வரை ஆண்களுக்கு வயதெல்லை 21—48 வரை கடவுச்சீட்டு தந்து ஒரு வாரத்தினுள் பிரயாணம் செய்யலாம். | — 50 பேர் | 400 SR |
| 12. | Labourers (தொழிலாளர்கள்) ஜெபனுன் நாட்டிற்குத் தேவை உணவு, தங்குமிடம் வழங்கப்படும். | | 100 USD |
| 13. | வீட்டுப் பணிப்பெண் (House Maids) | | 100 USD |

சகல நண்பர்கட்கும் அறியத்தருவது இவ்வருடத்தில் குறைந்தது 1000 பேருக்கு மேல் சவூதி அரேபியா, குவைத், ஓமான் போன்ற நாடுகளுக்கு அனுப்பிய ஒரேயொரு ஸ்தாபனம்

**T. V. TRAVELS**

அன்றும் இன்றும் நம்பிக்கை நாணயத்துடன் பிரயாண ஒழுங்குகளைச் செய்து தருபவர்கள்

**T. V. TRAVELS**

**Brown Road, Kokuvil**

இவ்வருடத்தில் கடைசியாக அரிய சந்தர்ப்பம் இந்தக் சம்பனி S. O. M. C. ஒன்று தான். ஒவ்வொரு மாதமும் தவறாது ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கும் கம்பனி இதுவேதான்.

● முக்கிய குறிப்பு:-

**S. O. M. C.**

இச்சம்பனியில் சகல தொழிலாளர்களும் இலங்கையர்கள். கடந்த எட்டு வருடமாக 5000 பேருக்கு மேல் தொழில் பார்க்கின்றார்கள். சகல துறைகளிலும் அதில் குறைந்தது மூவாயிரம் பேர் அளவில் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த தமிழர்கள். கூடிய பாகம் இக்கம்பனியில் தமிழர்களுக்கு தனிமதிப்புண்டு என்பதை உங்களுக்கு விளக்கத் தருகின்றோம் மூன்று வருடம் தொடர்ந்து எதுவிதமான பிரச்சினையுமின்றி வேலை செய்தால் திரும்பவும் அக்கம்பனியில் இலங்கை வந்து திரும்பப் போவதற்கு அக்கம்பனி சகல ஒழுங்கும் செய்து தரும்.

# T.V. TRAVELS & TOURIST

**BROWN ROAD, KOKUVIL.**

(C/805)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## மருத்துவ பீடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரரிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

1. உடலமைப்பியல் பேராசிரியர்
2. மருந்தியல் (ஃபார்மக்கொலொஜி) பேராசிரியர்
3. மருத்துவப் பேராசிரியர்
4. ஒன்கொலொஜி பேராசிரியர் (அறக்கொடைத்தவிசு-என்டோமென்ற்)
5. எலும்பு முறிவு அறுவை சிகிச்சையில் (ஓர்தோபெடிக் சேர்ஜரி) (அறக்கொடைத்தவிசு என்டோமென்ற்)
6. நோயியல் (பத்தோலொஜி)/ஒட்டுண்ணியியல்/நுண்ணுயிரியல்/உடற்றொழிலியல்/மகப்பேற்றியலும் மாதர் நோயியலும்/குழந்தை மருத்துவம்/அறுவை சிகிச்சையியலில் (சேர்ஜரி)/சமூக மருத்துவம்/சட்ட மருத்துவம் ஆகியவற்றில் சிரேஷ்ட விரிவுரையாளர்/விரிவுரையாளர்
7. நோயியல் (பத்தோலொஜி)/ஒட்டுண்ணியியல்/நுண்ணுயிரியல்/உடற்றொழிலியல்/மகப்பேற்றியலும் மாதர் நோயியலும்/குழந்தை மருத்துவம்/அறுவை சிகிச்சையியல் (சேர்ஜரி)/சட்ட மருத்துவம்/சமூக மருத்துவம் ஆகியவற்றில் தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர்/தற்காலிக விரிவுரையாளர்
8. உடற்றொழிலியல்/ஒட்டுண்ணியியல் ஆகியவற்றில் உதவி விரிவுரையாளர்/தற்காலிக விரிவுரையாளர்
9. உயிர் இரசாயனவியலில் தற்காலிக உதவி விரிவுரையாளர்

அறக்கொடைத்தவிசுப் பேராசிரியர், பேராசிரியர் பதவிகளுக்கான முடிவுத் திகதி: 1989-01-25

ஏனைய பதவிகளுக்கான முடிவுத்திகதி: 1988-12-19

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் விபரங்களையும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பேராசிரியர் பதவிக்கான விண்ணப்பப் படிவத்திற்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு ரூபா 1-50 சத முத்திரை ஒட்டப்பெற்ற 23×10 ச. மீ. அளவுடைய கடித உறையும் ஏனைய பதவிகளுக்கு 23×10 ச. மீ அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பெற்ற கடித உறையும் அனுப்பப்பட வேண்டும்.

1. மேற்குறிக்கப்பட்ட பதவிக்காகத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரியின் சிறப்புத் தகைமைகளையும்/அல்லது அனுபவத்தையும் கவனத்தில் எடுத்து சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.
2. ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியான விண்ணப்பப்படிவங்கள் தட்டெழுத்தில் பூர்த்தி செய்யப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபையில் உள்ள விண்ணப்பதாரி அவரின் நிறுவனத் தலைவர் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

- பதில் பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
1988 நவம்பர் மாதம் 10-ஆம் திகதி. (C/151)



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோயில்

# வழிபடுநர் சபை - 1989

மேற்படி கோயிலுக்கு 1989 ஆம் ஆண்டிற்கான வழிபடுநர்சபை உறுப்பினர்களாகச் சேரவிரும்பும் அல்லது அங்கத்துவத்தைப் புதுப்பிக்க விரும்பும் கீழ்க்காணும் தகைமையுள்ள சகல வழிபடுநரும் தமக்குரிய வருடாந்த அங்கத்துவப் பணத்தைப் "பொருளாளர், ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு" என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளையாகவோ அல்லது தபாற் கட்டளையாகவோ பெற்று கீழே காணப்படும் படிவங்களில் தமக்கு ஏற்புடையதான படிவத்தில் அமைந்த விண்ணப்பங்களுடன் சேர்த்து 1988ஆம் ஆண்டு மார்கழி மாதம் முப்பத்தோராந் (31) திகதி மாலை ஐந்து மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக 'செயலாளர்' ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில் நயினாதீவு" என்ற முகவரியிட்டு கடிதமூலம் அனுப்புமாறும் அல்லது கோயில் அறங்காவலர் சபைக் காரியாலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள் விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல மூலையில் "வழிபடுநர்சபை உறுப்புரிமை விண்ணப்பம்" எனக்குறிக்கப்படல் வேண்டும்.

**வழிபடுநர்சபை உறுப்புரிமைக்கான தகைமைகள்:-**

1. (அ) விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசித் திகதியில் 21 வயதிற்கு மேற்பட்டவராகவும்,
   (ஆ) இந்து மதத்தைச் சேர்ந்தவராகவும்.
   (இ) நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுநராகவும்.
   (ஈ) இலங்கைக் குடியரசில் நிரந்தரமாக வசிப்பவராக இருக்கும் ஒருவரே அங்கத்தவராக இருக்கத் தகுதியுடையவர். ஆனால் அப்படிப்பட்ட ஒருவர்,
2. (அ) தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் தினம் நடைபெறும் நான்குகால நித்திய பூசை ஒன்றில் உபயகாரராக இருப்பாராயின் அல்லது,
   (ஆ) தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் வருடாந்த மகோற்சவ திருவிழாக்கள் உட்பட எந்தவொரு விசேட நைமித்திய உற்சவ பூசை ஒன்றின் உபயகாரராக இருப்பாராயின் அப்படிப்பட்ட ஒருவரும் மேற்கூறிய நித்திய விசேட நைமித்திய பூசைகள் திருவிழாக்கள் மகோற்சவம் ஒன்றை. ஒரு அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பத்தினரோலோ அல்லது வழிபடுநரின் பிரிவினராலோ வகுப்பினராலோ செய்யப்படின் உறுப்புரை 2 (அ) அல்லது (ஆ) கூற்றின்படி அக்குடும்பமோ அல்லது அவ்வகுப்பினரோ தத்தமக்குள் வயது வந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரை வழிபடுநரின் சபைக்கு அங்கத்தவராக விண்ணப்பிக்கும் ஒருவர் வருடாந்த அங்கத்துவப் பணமாக ரூபா (10/-) செலுத்தலாம் தகைமையற்றவர்கள் மேற்கூறிய உறுப்புரை (அ) அல்லது (ஆ) வின்படி
   (இ) தனது விண்ணப்பப் படிவத்துடன் வருடாந்த அங்கத்துவப் பணமாக ரூபா ஐம்பது (50/-) 'பொருளாளர் ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோயில், நயினாதீவு என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளையாகவோ அல்லது தபாற்கட்டளையாகவோ பெற்று அனுப்பப்படுதல் வேண்டும்.
3. அத்துடன் எப்பொழுதாவது ஒழுக்கக்கேடு சம்பந்தமான குற்றத்திற்காக எந்த ஒரு நீதிமன்றத்திலும் தண்டிக்கப்படாதவராகவும்.
4. இக்கோயிலின் ஊழியராக அல்லது மதகுருவாக இருந்து வேதனங்கள் அல்லது கொடுப்பனவுகளை பெறாத ஒருவராகவும்,
5. இக்கோயிலில் லாபகரமான எவ்வித வேலைகளுக்குமாவ ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளாதவராகவும் இருத்தல் வேண்டும்.
6. குறிப்பு:- விண்ணப்பதாரரின் கையொப்பம் ஒரு சமாதான நீதவான், இந்துமதகுரு, இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர் கிராமசேவை உத்தியோகத்தர் அல்லது அரசாங்கப் பாடசாலை அதிபர் மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.
7. 1/- ரூபா செலுத்தி கோயில் காரியாலயத்திலும், பூபாலசிங்கம் புத்தகசாலையிலும் உரிய விண்ணப்பப்படிவத்தைப் பெறுக்கொள்ளலாம்

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு
23-11-1988

ஆ. தியாகராசா,
செயலாளர்,
அறங்காவலர் சபை. (C/815)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மானிப்பாய் வட்டாரக்
### கல்லூரிகளுக்கு பாடநூல் விநியோகம்

மானிப்பாய், நவ. 30 மானிப்பாய் கல்வி வட்டார பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த ஆண்டுக்கான இலவச பாடநூல்கள் இந்த வருட முடியுமுன்னர் வழங்கப்பட வேண்டும்.

இப்பகுதிப் பாடசாலைகளுக்காக 35000 இலவச நூல்கள் எமக்கு கிடைத்துள்ளன.

இம்மாதம் 30 ஆம் திகதியும் டிசம்பர் மாதம் 1-ஆம் திகதியும் மானிப்பாய் வட்டாரக்கல்வி அலுவலகத்தில் இந்நூல்களை அதிபர்கள் எடுத்துச் சென்று அவற்றை மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.'

இவ்வாறு மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற மானிப்பாய் வட்டாரப் பாடசாலை அதிபர்கள் கூட்டத்தில் தெரிவித்தார். (ச-90)


# நியூ சாந்தி வெண் திரையில்

இப்பொழுது குதூகலமாக!
2 ஆவது ஜனத்திரள் வாரமாக!!!
காட்சியளிக்கிறது!!!
தினசரி 10 30 2. 30 மட்டும்
புதிய வெளியீடு
இளம் உள்ளங்களைக் கிளுகிளுக்க வைக்கும்
ஒப்பற்ற காதல் காவியம்
இளையதிலகம்
பிரபு இளவரசி ரஞ்சனி
செந்தில் வினுச்சக்கரவர்த்தி
மற்றும்பலர் நடிக்கும்
## 'நாளெல்லாம்பௌர்ணமி'
[மின் தடை ஏற்படுமிடத்தும் காட்சிகள் நடைபெறும்] (C/ 808)


## உற்சவ காலங்களில் விற்கப்படும்
# இனிப்புப் பண்டங்களில் தீங்கு விளைவிக்கும் சாயம்
### சுகாதாரப் பரிசோதகர் எச்சரிக்கை

காங்கேசன்துறை நவ.30 ஆலய உற்சவங்களில் விற்பனை செய்யப்பட்ட இனிப்புப் பண்டங்களை பரிசோதனை செய்த சமயம் அவற்றில் 'ரெட்மீன்' என்னும் உடம்புக்கு தீங்கு விளைவிக்கும் சாயம் கலந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வலி வடக்குப் பகுதியில் ஆலய உற்சவ காலங்களில் விற்பனை செய்யப்பட்ட இனிப்புப் பண்டங்களில் சந்தேகம் ஏற்பட்டதை அடுத்து அவற்றின் மாதிரிகளை கைப்பற்றிய வலி வடக்கு பிரதேசசபை பொது சுகாதார பரிசோதகர் திரு ரி மகாதேவன் அவற்றை பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி இருந்தார்.

கொழும்பில் அவற்றை ஆய்வு செய்த நிபுணர்கள் இந்த இனிப்புப் பண்டங்களில் 'ரெட்மீன்' என்னும் சாயம் கலக்கப்பட்டுள்ளதாகவும், இது உடம்புக்குத் தீங்கு விளைவிக்குமென வும் புற்றுநோய் ஏற்படுவதற்கு வழிவகுக்கக் கூடியது என்றும் அறிவித்துள்ளனர்.

இவ்வாறான இனிப்புப் பண்டங்களை பொதுமக்கள் தமது பிள்ளைகளுக்குவாங்கிக் கொடுப்பதை தவிர்க்குமாறு சுகாதார பரிசோதகர் திரு ரி. மகாதேவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இனிப்புப் பண்டங்களை தயாரித்து விற்பனை செய்பவர்கள இவ்வாறு சாயம் கலப்பதை தவிர்க்க வேண்டுமெனவும், அவ்வாறு செய்யாத பட்சத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் எச்சரித்துள்ளார். (இ-68) (இ)

## பருத்தித்துறை நகரசபைக்கு
### வேலை அத்தியட்சகர் நியமனம்

பருத்தித்துறை நகரசபையில் இதுவரை தொழில் நுட்ப உத்தியோகத்தா பதவி மாத்திரம் இருந்தமையால் இந்நகரசபையில் பத்தாயிரம் ரூபா வரையான வேலைகளுக்கான மதிப்பீடுகள் மாத்திரமே செய்யக் கூடியதாக இருந்தது.

பத்தாயிரம் ரூபாவுக்குக் கூடுதலான மதிப்பீடுகள் யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து அனுமதி கிடைக்கும் வரை எதிர்பார்த்திருக்க வேண்டிய நிலை இருந்து வந்தது.

தற்போது புதிய வேலைகள் அத்தியட்சகர் பதவி உருவாக்கப்பட்டதும் பருத்தித்துறை நகரசபையிலே ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகைகளையுடைய மதிப்பீடுகளைக் கூடத் தயாரிக்ககூடியதாக உள்ளது.

இது இந்நகரசபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மிக இன்றியமையாததாகும் என நகரசபைச் செயலாளர் திரு. கே சண்முகநாதன் தெரிவித்தார் (ச-118)

### சாரணர் அபிவிருத்தி ஆண்டு

காங்கேசன்துறை நவ 30 காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கம் அதன் 10ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு பலவேறு அபிவிருத் திட்பணிகளையும், செயல் திட்டங்களையும் மேற்கொள்ள முடிவு செய்துள்ளது.

இதற்காக இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து 1989 அக்டோபர் 31 ஆம் திகதிவரை சாரணர் அபிவிருத்தி ஆண்டாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் பலவேறு அபிவிருத்திப் பணிகளிலும், செயல் திட்டங்களிலும் ஈடுபடுமாறு மாவட்ட சாரண ஆணையாளர் திரு நா. பேஜன் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-68

## மக்கள் முகம்

### காங்கேசன்துறை வர்த்தகர் சங்கம்

யாழ்ப்பாணம் நவ 30 காங்கேசன்துறை வர்த்தகர்கள் இராஜநாயகிக் திரையரங்கில் ஒன்று கூடிப்பின்வருவோரை 1989 ஆம் ஆண்டுக்கான உத்தியோகத்தர்களாக ஏகமனதாகத் தெரிவு செய்துள்ளனர்,

தலைவர்: க.செல்லையா. உப தலைவர்: சி. முருகையா. செயலாளர்: க முத்தையா இணைச் செயலாளர்: செ. கமலநாதன் பொருளாளர் இ பாலேந்திரன்(ச)

### சேவை நலன் பாராட்டு விழா

கொடிகாமம், நவ 30 சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு அ தங்கராசா இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு சாவகச்சேரி கல்வி வட்டாரப் பாடசாலை அதிபர்களால்சாவகச்சேரி மறியேக் கல்லூரியில் சேவை நலன் பாராட்டு விழா நடத்தப்பட்டது (ச-75)

### அனைவரும் சித்தி

மண்டைதீவு. நவ 30 வட இலங்கை சங்கீத சபையின் வருடாந்த செய்முறை பரீட்சைக்கு மண்டைதீவு மகாவித்தியாலயத்திலிருந்து தோற்றிய மாணவிகள் அனைவரும் சித்தியடைந்துள்ளார்கள்.

இவர்களுக்கான சான்றிதழ்களை மேற்படி சபைத் தலைவரும் மாவட்ட கல்விப்பணிப்பாளருமான திரு வெ. சபாநாயகம் அனுப்பி வைத்துள்ளார் (ச - 88)

## யாழ்நகர் பாடசாலைகளில்:
# உயர்தர வகுப்புகளுக்கு அனுமதி கோரி பெற்றோர் படையெடுப்பு

மண்டைதீவு நவ. 30 மிக அண்மையில் வெளிவந்த ஜி சி. ஈ சாதாரணதரப்பரீட்சையில் யாழ்குடாநாட்டைச் சேர்ந்த 75சதவீத மாணவர்கள் இம்முறை சித்தியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக யாழ் நகரின் பிரபல கல்லூரிகளில் ஜி சி. ஈ உயர்தர வகுப்புகளுக்கு அனுமதி கோரி பெற்றோர்கள் படையெடுத்த வண்ணம் இருக்கின்றனர்கள்

தீவுப்பகுதியைச் சேர்ந்த பெற்றோர்கள் மேற்படி கல்லூரிகளுக்கு அனுமதி பெறுவதற்கு சென்று சலிப்புடன் திரும்புவதை காணக் கூடியதாக இருக்கின்றது

பாடசாலையிலிருந்து தோற்றிய பரீட்சார்த்திகளில் 90% வீதமானவர்கள் இம்முறை சித்தியடைந்ததைத் தொடர்ந்து இடநெருக்கடி, ஆசிரிய தட்டுப்பாடு காரணமாக புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்கு அதிபர்கள் தயங்குகிறார்கள் (ச-88)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
17.02.1968
உதிர்வு
11.12.1987
திதி
30.11.1988

செல்வன் கந்தசாமி சுதர்ஸன்

எம் அன்புச் செல்வமே!
எம்மையெல்லாம் துயரத்தில் ஆழ்த்தி எங்கு நீ சென்றாய்? என்றும் உன் நினைவு எம் நெஞ்சைவிட்டு அகலாது.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் வாடும்
அம்மா, தங்கை, அன்ரிமார்.
திருமதி கந்தசாமி பேபி,
மயிலணி வடக்கு சுன்னாகம். (7753)



+
J. M J

உங்கள் பயண அமைப்பாளர்




## மத்திய கிழக்கில் உடனடி வேலைவாய்ப்பு ஒழுங்குகள்

**JORDAN - யோர்தான்**

யோர்தான் அரசாங்கத்தினால் பரிபாலிக்கப்படும் விமான நிலையம், வைத்தியசாலை, பாடசாலை ஆகியவற்றில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களாகச் செல்ல விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

Cleaners U. S 450
General Helpers U S 450
வயதெல்லை: 18—35

**சவூதி அரேபியா**

சவூதி அரேபியா அரசுக்குச் சொந்தமான பாரிய மீன்பிடிக் கப்பல்களில் பணிபுரிவதற்குக் கீழ்க்காணும் பதவிவெற்றிடங்கள் உடனடியாக உள்ளன.

| | சம்பளம் | | |
|---|---|---|---|
| Captain / Master - | 1500 S R | 12.000/- | ரூபா |
| III rd Engineer | 1200 S.R | 10,000/- | ரூபா |
| மீன்பிடித் தொழிலாளர்கள் | 900 S.R | 7, 200/- | ரூபா |

உணவு இருப்பிட வசதிகள் இலவசம்

விரும்பும் கடற்தொழிலில் போதிய அனுபவம் உடையவர்கள் மட்டும் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Saudi Visa**

1. Mr. Marian Vincent Sutharasingh
   கரையூர் - H 0376706
2. Mr. Sebamalai Mariyan Thevathasan
   ஊர்காவற்றுறை - J 0260845
3. Mr. Emmanuel Francis Justin
   ஊர்காவற்றுறை - H 0306598
4. Mr. Manuel Dadycilus alias Douglus Selvakumar
   - H 0292 92

மேலே குறிப்பிட்ட பெயர் உடையவர்களுக்கான பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

விசா மற்றும் ஒழுங்குகள் மிகத் துரிதமாகச் செய்து தரப்படும், மேலதிக விபரங்களுக்கு உடன் நேரில் வருக.

உங்கள் பயண அமைப்பாளர்,
## எஸ். பி. அன்ரன்
No. 648 1 3, ஆஸ்பத்திரி வீதி
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம். (C/799)



# Accountancy Courses
## For May/June 1989 Examinations

| | | ஆரம்பம்: |
|---|---|---|
| **C.I.M.A. (I.C.M.A.)** | | |
| STAGE | I | 3—12—88 |
| STAGE | II | 10—12—88 |
| STAGE | III | 10—12—88 |
| **A.A.T. (London)** | | |
| PRELIM | | 3—12—88 |
| INTER | | 17—12—88 |
| FINALS | | 17—12—88 |
| **A.A.T. (Sri Lanka)** | | |
| LEVEL | I | 3—12—88 |
| LEVEL | II | 17—12—88 |
| **CERTIFICATE IN ACCOUNTING (London)** | | 3—12—83 |
| **I.A.B.** | | |
| FOUNDATION | | 3—12—88 |
| INTER | | 17—12—88 |
| FINAL | | 17—12—88 |
| **I.D.P.M.** | | |
| PART | I | 3—12—88 |
| PART | II | 17—12—88 |

Our Panel of Lecturers includes:

M/s R N VARENDIRAN, K. NANTHAKUMARAN, K. KAMALAKUMAR V ARIYARATNAM K. ARAVINDAN, S THILAKAKUMAR, S NARENDIRAN K. MAHENDIRAN & D. GNANASEELAN


Contact:

'Result Oriented Institute in Jaffna'

## NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St. Peters Lane,
Hospital Road, JAFFNA.
(C 786)



## ஓராண்டு நினைவஞ்சலி



திரு அருளம்பலம் செல்லச்சாமி
(இளைப்பாறிய லிகிதர் துறைமுக அதிகார சபை)

ஆண்டவன் படைப்பு: 27 - 3 - 1931
அழிப்பு: 24 - 10 - 1987

திதி. 11 - 11 - 1988 (வெள்ளிக்கிழமை)

அன்பின் பிறப்பிடமாய், பண்பின் இலக்கணமாய் தோன்றி, வீட்டிற்கும் சேவை செய்து நாட்டிற்கும் சேவை செய்யும் வேளையில் காலன் உங்களைக் கவர்ந்து சென்றானே ஐயா!

உயர் இலட்சியங்கள், நீதிகள், நியாயங்கள் என்றும் அழிந்ததில்லை.

உங்கள் ஈடு செய்ய முடியாத
பிரிவுத் துயரால் வாடும்:
மனைவி, மகன்மார், மகள், தாய்.
சகோதரன்மார், சகோதரிமார், மாமி.
மச்சான்மார் மச்சாள்மார், மருமகன்மார்,
மருமகள்மார், உறவினர்கள், நண்பர்கள்.

இராஜ வீதி
நல்லூர், யாழ்ப்பாணம்:
(7813)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

எல்லைக்கண் நின்ருர் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்ருர் தொடர்பு

**பொருள்:**

உரிமை வாழ்வின் எல்லையில் நின்றவர், தமக்கு அழிவு நேர்ந்த விடத்திலும் பழமையாய் உறவு கொண்டு நின்றவரின் தொடர்பைக் கைவிடமாட்டார்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:- 292/2 நாவலர்வீதி தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
30-11-1988 த. பெ. இல 23

## மின்சார பாவனை

மக்களின் நாளாந்த வாழ்க்கையில் மின்சாரம் இன்று முக்கிய இடத்தை வகித்து வருகிறது

வசதி படைத்தவர்கள் மட்டும் அன்றி பொதுவாக அனைவருமே, மின்சாரத்தைப் பயன்படுத்தி வருகிருர்கள்.

மின்சாரம் இல்லாவிட்டால் நாளாந்த வாழ்க்கையே ஸ்தம்பிதம் அடையும் நிலை இருந்து வருகிறது. அந்த அளவுக்கு மின்சாரம் மக்களுடன் இரண்டறக் கலந்து விட்டது.

1983 ஆம் ஆண்டு முதல் உக்கிரம் அடைந்து கடந்த ஆண்டு உச்சக்கட்டத்தை அடைந்த தமிழீழப் போராட்டம் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கருவியாகச் செயற்பட்டு வந்த ஆயுதப் படையினருக்கு எதிராகவே முற்று முழுதாக நடத்தப்பட்டு வந்தது.

பொதுச் சொத்துக்களை நாசப்படுத்தவோ அல்லது பாடசாலைகளை ஸ்தம்பிதம் அடையச் செய்யவோ அதிகம் முயற்சி எடுக்கப்படவில்லை.

ஸ்ரீலங்கா அரசபடைகள் முகாம்களுக்குள் முடங்கி இருந்த அன்றைய நிலையில் நினைத்திருந்தால் அரச சொத்துக்களை நொடிப் பொழுதில் நாசம் செய்திருக்க முடியும் ஆனல் தமிழ்ப் போராளிகள் அப்படிச் செய்ய நினைக்கவில்லை

ஆனல் இன்று தெற்கில் நிலைமை வேறு ஆயுதப்போராட்டத்துடன் அரச சொத்துக்களுக்கு நாசம் விளைவிக்கும் நடவடிக்கைகளும் சமாந்தரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

50க்கும் அதிகமான மின்சார டிரான்ஸ்போமர்கள் மற்றும் மின்கோபுரங்கள் மின் கம்பங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன- இதன் விளைவுதான் இன்றைய மின்சாரத் தடை.

கடந்த புதன்கிழமை ஹபரணைக்கும் அனுராதபுரத்துக்கும் இடையில் மின் கோபுரம் ஒன்று நாசமாக்கப்பட்டதை அடுத்து வடபகுதிக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

சேதமடைந்த மின்கோபுரங்களைத் திருத்தச் செல்லும் மின்சாரசபை ஊழியர்கள் கொலைப் பயமுறுத்தல்களுக்கு உள்ளாவதால் இவற்றை உடனடியாகச் சீர்செய்யும் சாத்தியங்கள் தற்போது குறைந்து வருகின்றன.

இத்தகைய நிலையில் காங்கேசன்துறையிலிருந்து ஜெனரேட்டர்கள் மூலம் தற்போது வடபகுதி எங்கும் பகுதி பகுதியாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

தெற்கில் பல பகுதிகள் இன்னும் முற்றாக இருளில் மூழ்கி இருக்கும்போது வடபகுதிக்கு இந்த அளவிலாவது மின்சாரம் வழங்கப்படுவது ஆறுதல் அளிக்கிறது.

அதுவும் 20 வருடகால பழைய ஜெனரேட்டர்களை வைத்துக்கொண்டு மின்சார சபையின் வடபிராந்தியப் பணிமனை இந்த அளப்பரிய சேவையை ஆற்றிவருகிறது.

இன்றைய நிலையில் பொதுமக்கள் செய்ய வேண்டியது என்ன?

மின்சார சபைக்குத் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவதுதான் அவர்கள் செய்யவேண்டிய கடமையாகும்

பொதுமக்கள் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பாவித்து மின்சார சபையுடன் ஒத்துழைத்தால் மட்டுமே தொடர்ந்து இந்த அளவிலாவது மக்கள் மின்சாரத்தைப் பெற முடியும்.

தற்போது வடக்கில் மூன்று அவத்தைகள் (Three Phase) பயன்படுத்தும் தொழிற்சாலைகள் மிகவும் மூடப்பட்டுள்ளன

இவற்றில் வேலைசெய்யும் நூற்றுக்கணக்கான நாளாந்த ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் மின்சாரசபையுடன் ஒத்துழைத்தால் இப்படியான அவலநிலையையும் நீக்க மின்சார சபை உதவக் கூடும்.

## ஆலய திருப்பணிக்கான நிதி வெளிநாடுகளில் சேகரிப்பு

ஊர்காவற்றுறை கரு வில் ஐயனர் தேவஸ்தானத்திற்கான தேர், இராஜகோபுரம், ஆகியவற்றின் அமைப்பு வேலைகளுக்கான நிதியைச் சேகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேற்படி தேவஸ்தான பரிபாலன சபையின் உறுப்பினரான திரு த. ஏரம்பமூர்த்தி அண்மையில் லண்டன், மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகளுக்குச் சென்று அங்கு வதியும் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த அன்பர்களிடமிருந்து சுமார் ரூபா ஐந்து லட்சத்திற்கு மேலான பணத்தைச் சேகரித்து வந்துள்ளார்.

# ஈராக்கிலும் பல கட்சி அரசமைப்பு

# அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

பாகதாத், நவ 29

ஈராக் நாட்டிலும் பல கட்சி அரசியல் முறை கொண்டு வரப்படவுள்ளது

ஈராக் ஜனதிபதி சதாம் ஹுசேன் இதனை நேற்று அறிவித்தார்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னர், 1968 ஆம் ஆண்டில், புரட்சி ஒன்றின் மூலம் பதவிக்கு வந்தவர் சதாம் ஹுசேன்.

ஒரு கட்சி அரசியல் முறையை கடந்த இரு

### ஜனதிபதி சதாம் ஹூசேன் அறிவிப்பு

பது ஆண்டுகளாக அவர் அமுல் நடத்தி வருகிருர்.

அவரின் ஆளும்பாத் கட்சியே நாட்டை நிர்வகித்து வருகிறது.

நேற்று ஜனதிபதி சதாம் ஹுசேன் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை ஒன்றில் பல கட்சி முறையைக் கொண்டு வரப்போவதாக அவர் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு அளிக்கப்போவதாகவும் அவர் அப்போது தெரிவித்தார். (எ)

## ஈரான் பிரதமர் தடுப்புக் காவலில்!

லண்டன், நவ 29

ஈரான் பிரதமர் முஸாபீர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்று லண்டன் ஒப்சேர்வர் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஒரு வாரத்தின் முன்பு முஸாபீர் பதவி நீக்கஞ் செய்யப்பட்டார் என்றும்—

அவரின் இடத்துக்கு தற்போது வெளியுறவு அமைச்சர் அலி அக்பர் வேலாயதி நியமிக்கப்படலாம் என்றும் அப்பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஐரிஷ் - பிரிட்டிஷ் அரசியல் நெருக்கடி

லண்டன், நவ 29

அயர்லாந்துக்கும் பிரிட்டனுக்கும் இடையே அரசியல் நெருக்கடி ஒன்று ஏற்பட்டிருக்கிறது. லண்டனில் வன்செயல்களுக்கு திட்டமிட்ட குற்றச்சாட்டின் பேரில் தேடப்பட்டு வரும் கிறிஸ்தவ மத குரு ஒருவரை அயர்லாந்தில் இருந்து நாடு கடத்தும்படி பிரிட்டன் டப்ளின் அரசாங்கத்தைக் கேட்டிருந்தது.

சம்பந்தப்பட்ட மத குருவான வண பிதா பட்ரிக் ரயான் முன்னர் பெல்ஜியம் நாட்டில் தஞ்சமடைந்திருந்தார்.

பிரிட்டன் அவரை நாடு கடத்தும்படி பெல்ஜியம் அரசைக் கோரியிருந்தது.

அதற்கு பெல்ஜியம் அரசு மறுத்துவிட்டதுடன் கிறிஸ்தவ மத குருவை அயர்லாந்துக்கு அனுப்பி வைத்தது.

அவரை நாடுகடத்த இப்போது அயர்லாந்து அரசும் மறுத்து விட்டது.

இதனல் பிரிட்டன் அயர்லாந்து அரசின் போக்கில் ஆத்திரமடைந்துள்ளது (எ)

## பிக்காஸோவின் ஓவியம் ஒன்று 101 கோடி ரூபாவுக்கு ஏலம் போனது!

### இருபதாம் நூற்றுண்டின் உலக சாதனை

லண்டன், நவ 29

காலஞ்சென்ற பிரபல ஓவியர் பாப்லோ பிக்காஸோவின் ஓவியம் ஒன்று நேற்று முன்தினம் 2 கோடி 10 லட்சம் பவுண்களுக்கு (இலங்கைப் பணத்தில் சுமார் 101 கோடி ரூபா) ஏலம் போய் உலக சாதனை ஒன்றை இருபதாம் நூற்றுண்டில் ஏற்படுத்தியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

வியான சாகஸ நிகழ்ச்சியை சித்திரிக்கும் இந்த ஓவியத்தை ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஒருவரே இந்த விலை கொடுத்து ஏலத்தில் வாங்கினர்

மூன்றரை நிமிடங்களில் இந்த ஓவியம் ஏலத்தில் விற்பனையானதாக பி பி ஸி அறிவித்தது.

ஏலத்தை நடத்தியவர்கள் எதிர்பார்த்த விலையிலும் பார்க்க இரண்டு மடங்கு அதிகமாக ஓவியம் விற்கப்பட்டது

பிக்காஸோவின் ஓவியங்களின் ஏல விற்பனையில் இதுவே ஆகக்கூடிய தொகைக்கு விற்பனையானது.

கடந்த மாதம் 'தாய்மை'யைச் சித்திரிக்கும் பிக்காஸோவின் ஓவியம் ஒன்று 1 கோடி 40 லட்சம் பவுண்களுக்கு ஏலத்தில் விற்பனையானது. இது இலங்கைப் பணத்தில் சுமார் 55 கோடி ரூபாவுக்குச் சமமானது. எ)

### சுபாஷ் கிஷிங் போட்டியின்றி தெரிவு

கல்கத்தா, நவ 29

டார்ஜிலிங் வளர்ச்சி சபைத் தேர்தலில் கூர்க்கா தேசிய விடுதலை முன்னணித் தலைவர் சுபாஷ் கிஷிங் போட்டி இன்றித் தெரிவு செய்யப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

சபையின் 28 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான நியமனப்பத்திரங்கள் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டன.

**வெளி உலகில்**

## ஆப்கன் கெரில்லாக்கள் சோவியத்துடன் பேச்சு

இஸ்லாமபாத், நவ 29

யுத்தக் கைதிகளை விடுவிப்பது குறித்து ஆப்கன் கெரில்லாத் தலைவர்களுக்கும் சோவியத் அரசுக் குழுவிற்கும் இடையே இரண்டாம் கட்டப்பேச்சுக்கள் சவூதி அரேபியாவில் இன்னும் சில தினங்களில் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது

முதலாம் கட்டப் பேச்சுக்கள் இஸ்லாமபாத்தில் கடந்தவாரம் இடம் பெற்றன.

ஆப்கன் பிரச்சினைக்குத் தீர்வு காணுவது குறித்தும் இப்பேச்சுக்களில் ஆராயப்பட்டது

இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் ஏழு கெரில்லா அமைப்புக்களின் கூட்டணியின் தூதுக் குழுவுக்கு முகமது ரபானி தலைமை வகிப்பார்

சோவியத் குழுவுக்கு உதவி வெளியுறவு அமைச்சர் தலைமை வகிப்பார். (எ)

## முன்னுள் ஜனதிபதிக்கு இருபது வருட சிறைவாசம்

லண்டன், நவ. 29

டொமினிக்கன் குடியரசின் முன்னுள் ஜனதிபதிக்கு 20 வருடச் சிறைத் தண்டனையும் 1 கோடி 60லட்சம் டாலர் அபராதமும் விதிக்கப்பட்டது.

இரண்டு வர்த்தகர்களுக்கும் இதே தண்டனை விதிக்கப்பட்டது.

முன்னுள் ஜனதிபதியின் பெயர் பீட்டர் பிளாஸ்க். அவர் பதவியில் இருந்தபோது, இராணுவத்துக்கு ஆயுதங்கள் வாங்கியதில் மோசடி செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டார்.

நீதிமன்ற விசாரணை முடிவில் அவருக்கும் இரண்டு வர்த்தகர்களுக்கும் சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டது. எ)

# அன்னை ஸ்ரீ சாரதாதேவி ஓர் அன்புக் களஞ்சியம்

யாழ்ப்பாணம் நவ 30

"அன்னை ஓர் அன்புக் களஞ்சியம். பொறுமை, அடக்கம், கருணை இவர்களிடத்தில் மிளிர்ந்த சிறப்புக்கள்" எப்படி கங்கை யமுனை சரஸ்வதி எனப்படும் திரிவேணி சங்கமத்தில் சரஸ்வதி எவருக்கும் புலப்படுவது இல்லையோ அதேபோல் ஸ்ரீ சாரதா தேவி கண்ணுக்குப் புலப்படாமல் ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்துக்கு ஆணிவேராகத் திகழுகிறர்.

வெள்ளவத்தை ஸ்ரீ சுவாமி விவேகானந்த மண்டபத்தில் பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் 19 ஆண்டுகள் சேவையின் பூர்த்தி குறித்து நடைபெற்ற தெய்வீக மாலைப் பொழுதில் கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த அஜராத்மானந்தர்

### பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம ஆண்டு விழாவில் உரை

தனது உரையில் மேற்கண்டவாறு கூறினர்

கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மடத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சம்பிரக்ஞானந்தர் இந் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

சுவாமி சித்ரூபானந்தா தனது வரவேற்புரையில்–

"அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் பெயரால் அவரது ஜயந்தியன்று பத்தொன்பது வருடங்களுக்கு முன் மிகச்சிறிய அளவில் ஆரம்பித்த இச் சேவாச்சிரமம் திக்கற்ற பலருக்கு ஆதரவு கொடுத்து இன்று பெரிய ஆலமரமாகத் திகழ்கின்றது இதன் வளர்ச்சிக்குத் திருவருள் பாலித்த அன்னையின் திருவடியில அன்புக் காணிக்கை செய்யவே கொழும்பு மாநகரில் இவ் வைபவத்தை ஏற்பாடு செய்தோம்

இப்படி அவர் கூறினர்.

### ● இவர்களுக்கு இராணுவத்தில சேர வாய்ப்பு

கொழும்பு, நவ. 30

பஸ் லொறி, பவுஸர்கள் ஓட்டும் லைஸன்ஸ் பெற்றிருப்பவர்கள் உடனடியாக அருகில் இருக்கும் பாதுகாப்பு ஒருங்கு இணைப்பு அதிகாரி அலுவலகத்துக்குச் சென்று பெயர்களைப் பதிவு செய்யும்படி பாதுகாப்பு அமைச்சு கேட்டிருக்கிறது.

பெயர்களைப் பதிவு செய்பவர்களில் அனுபவம் மிக்க சாரதிகள் இராணுவ சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவர் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (ஒ–எ)

## டிரான்ஸ்போமர் திருத்தம்; தடுத்த தீவிரவாதிகள் கைது!

கொழும்பு. நவ. 30

மின் வநியோகத்தில் எதுவித மாற்றமும் இல்லை என்று அரசு அறிவித்துள்ளது

அநுராதபுரம்வடக்கு, காலி, மாத்தறை பொலன்னறுவ, தெஹிவளை–கல்கிசை மகரகம அம்பாந்தோட்டை பகுதியில் தொடர்ந்தும் மின விநியோகம் இல்லாமல் உள்ளன.

சேதமாக்கப்பட்ட டிரான்ஸ்போமர்கள், மின்கோபுரங்களைத் திருத்தும் பணி தொடர்கின்றது. அவற்றைத் தடுக்கும் நடவடிக்கைகளில் தீவிரவாதிகள் ஈடுபட்டு வருவதாகவும் அப்படி ஈடுபட்ட சிலர் கைது செய்யப்பட்டு விசேட அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் தண்டிக்கப்பட்டனர் என்றும் அரசு அறிவித்துள்ளது. (ஒ – எ)

### மீண்டும் பழைய இடத்தில்

பச்சிலைப்பள்ளி, நவ 30

கடந்த ஒரு வருடமாக டளை ப. நோ. கூ. சங்கக் கட்டட மண்டபத்தில் இயங்கிவந்த பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மீண்டும் பழைய இடத்தில் கடந்த வாரம் முதல் இயங்கிவருகின்றது

இக் கட்டடத்தை அமைதிப் படையினர் பொதுமக்களின் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் அலுவலகமாக பயன்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

### நியாய விலையில் விற்பனை

வேலணைப நோ. கூட்டுறவுச்சங்கத்தின் மண்டைதீவு கிளைகளில் தற்பொழுது தேங்காய், வெங்காயம் போன்றவை நியாயமான விலையில் விற்கப் படுகிறது.

இது குறித்து பாவனையாளர்கள் திருப்தி தெரிவிக்கின்றனர்கள் (ச - 88)

### இன்று நல்லூரில்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 112ஆவது குருபூசை இன்று புதன் காலை 9 மணிக்கு நல்லூர் கைலாசநாதசுவாமி ஆலய முன்றலில் நடைபெறுகின்றது.

நல்லை ஆதீன குரு மஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஆசியுரையுடன் ஆரம்பமாகும் நிகழ்ச்சிகள் திரு. நம சிவப்பிரகாசத்தின் தலைமையில் தொடர்ந்து நடைபெறும்.

ஆலய வழிபாடு, கூட்டுப் பிரார்த்தனை புராண படனம் என்பவற்றைக் தொடர்ந்து திரு. சிசீவரத்தினம் வரவேற்புரையும், திருவாளர்கள் க. தர்மலிங்கம், வே சுப்பிரமணியம், வே. சபாரத்தினம், கு துரைராஜா, ந. சோமசுந்தரம் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவும் ஆற்றுவர்.

நாவலர் தர்ம பாதுகாப்புச் சபையின் 20 ஆவது ஆண்டுக்கான பொதுக்கூட்டமும் நடைபெறவுள்ளது (ஒ)

### முல்லை அரச அதிபருக்கு பாராட்டு

முல்லைத்தீவு மாவட்டத்தில் அனேக கிராமங்களிலுள்ள மக்கள் வறுமை நிவாரணம், வரட்சி நிவாரணம் என்பனவற்றிற்குரிய பொருள்களை ப நோ. கூ. சங்கக் கிளைகள் மூலம் மாதாந்தம் பெற்று வருகிருர்கள்.

இதேவேளை அகதிகள் ரொக்கக் கொடுப்பனவுகளும் பெற்று வருகிருர்கள்.

இவைகளைப் பெறுவதற்கு முல்லைத்தீவு அரச அதிபர் திரு க பொன்னம்பலத்தின் விடாமுயற்சியே காரணமென மக்கள் பாராட்டுத் தெரிவிக்கின்றனர். (ஓ-113)

**வாசகர் திருமுகம்**

## பல்கலைக்கழகமும் நாமும்

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு அனுபவம் வாய்ந்த போதனசிரியர்கள், விரிவுரையாளர்கள் பற்றுக்குறை பற்றி அடிக்கடி எடுத்துரைக்கப்படுகிறது. பற்றாக்குறையால் எமது மருத்துவ மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகிறது.

இப்படி இருக்கையில் விரைவில் அமைக்க இருக்கும் விவசாயபீடத்திற்கும் பேராசிரியர்கள் போதனசிரியர்கள், விரிவுரையாளர்கள் அனுபவம் வாய்ந்தோர் பணியாற்ற முன்வரவேண்டும் தனிநாயகம் வேந்தர் பேராசிரியர் துரைராசாவைப்போல் நாட்டுப்பற்றுடையோர் அவர் வழி பின்பற்றி எமது பல்கலைக்கழகத்தை வளர்க்க முன்வர வேண்டும்

மேலும் தமிழ் மொழி மூல சட்ட பீடம், சித்த மருத்துவ பீடம் ஆகியவை அமைக்க வேண்டும் என அண்மையில் அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இவை நடைமுறைக்கு வருவதுடன் பொதுவாக எமது பல்கலைக்கழகம் எமது பொருளாதாரத்திற்கு எம்மிடமுள்ள வரையறுக்கப்பட்ட மூலப்பொருள்களை இலாபகரமாக பாவிக்க என்ன நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும் என்பதனை அறிய ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

தனியார் துறையினரின் ஆர்வத்தை வளர்த்து, அவர்களின் சக்தியை நமது நலனுக்கு திரட்டி எடுக்க ஆய்வு நடத்தவேண்டும். பொருளாதாரத்தைப் பெருக்கி நமது தரத்தை உயர்த்தவேண்டும்.

இப்படியான விடயங்களில் நாம் கவனம் செலுத்துவோமானல் எமது பல்கலைக்கழகம் நாளடைவில் முதிர்ச்சியடைந்து உலக முன்னோடிப் பல்கலைக்கழகங்களில் ஒன்றாக வரலாம் இத்தகைய நீண்டகால நோக்குடன் எமது துணைவேந்தர் திட்டங்களை வகுத்தால் எமது சமுதாயத்திற்கு முழுமையான பயன் பல்கலைக்கழகத்தினல் கிடைக்கும்

மேலும் நாம் உருவாக்கும் பட்டதாரிகள் எமது சமூகத்திற்கே சேவை செய்யும் வாய்ப்பும் இத்துடன் உருவாகும். பட்டதாரிகள் அல்லாதவர்களும் ஆய்வுகளில் பங்குபற்றி, கலந்துரையாடுவதன் மூலம் முழு சமுதாயமுமே பல்கலைக்கழகத்தால் இணைக்கப்படும்.

இத்தனை காலமும் 5 வீத மாணவர்கள் மட்டும் பயனடைந்த பல்கலைக்கழகத்தின் குடையில் சகல மக்களும் பிரயோசனப்படுவார்கள். இதனல் பல்கலைக்கழகத்தின் தரம் குறையும் என நினைப்பது ஆகாது, ஏனெனில் பட்டதாரிகளாக கல்வியூட்டப்படுபவர்களைத் தெரிவு செய்யும் முறையில், மாற்றம் இருக்கமாட்டாது

இப்படிச்செய்வதானல் எமது பல்கலைக்கழகம் மக்களைத்தேடிப்போக வேண்டும் ஒரு இடத்தில் பெரிய கட்டடங்களை அமைக்காமல், ஒவ்வொரு மாவட்டத்திலும வெவ்வேறு பீடங்களை அமைக்க வேண்டும்.

இ. த. இராமச்சந்திரன்,
பொறியியலாளர்
மூளாய், சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப்பிரதிகளை
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

30 - 11 - 1988 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
• நெகடிவ் (PROCESSING) செய்தல் இலவசம்
• சிறப்பான வர்ண நிழற்படச்சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள

## கல்விப் பணிப்பாளர் நாடு திரும்பினார்

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் நேற்று மீண்டும் தமது பணிப்பாளர் பதவியைப் பொறுப்பேற்றார்.

அண்மையில் மேற்கு ஜேர்மனியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொள்வதற்காக அவர் அங்கு சென்றிருந்தார்.

மேற்குஜெர்மனியில் கருத்தரங்கை முடித்துக் கொண்டு டென்மார்க்கிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை அவர் மேற்கொண்டார்.

இதனை அடுத்து ரோம் நகரிற்கு தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்ட பணிப்பாளர் வத்திக்கானில் பாப்பரசரின் தரிசனத்தையும் பெற்றுக்கொண்டார். [உ-9]

## மின் விநியோக....

(1ம் பக்கத் தொடர்ச்சி) சாலைகளை இயங்க வேண்டாமென்று வடபகுதி மின்சாரசபை ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இதே சமயம் மின் விநியோகம் குறித்து வெளியிடப்பட்டிருக்கும் உத்தேச நேர அட்டவணையின் பிரகாரம் மின்சாரத்தை விநியோகிப்பது கஷ்டமானதாகும்.

எனவே மின்சாரம் ஒவ்வொரு பகுதிக்கும் எந்த எந்த நேரத்தில் விநியோகிக்கப்படுகிறதோ அந்த நேரங்களில் பாவனையாளர்கள் மின்சாரத்தை சிக்கனமாகப் பாவிக்கும்படி கோரிக்கை விடுக்கிறோம்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(உ ஐ)

## பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ 30

யாழ் மாவட்டப் பாடசாலைகளின் 4 ஆம், 5 ஆம் வகுப்புக்களுக்கான ஆண்டிறுதிப்பொதப்பரீட்சை ஒருநாள் பின்போடப்பட்டுள்ளது.

இன்றும், நாளையும் நடைபெற இருந்த பரீட்சைகள் நாளையும், நாளை மறுதினமும் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

இன்று நடைபெற இருந்த பரீட்சை நேரசூசி நாளையும், நாளைய நேரசூசி நாளை மறுதினத்துக்கும் செல்லுபடியாகும் என கல்வித் திணைக்களப்பரீட்சை சபை சார்பில் கல்விப்பணிப்பாளர் திரு.வெற்றிவேலு சபாநாயகம் அறிவித்துள்ளார். (ஓ)

## வேலை ..

(1ம் பக்கத் தொடர்ச்சி) இருந்து நீக்கப்பட்டவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்தினால் முழு நிர்வாக இயந்திரமும் பாதிக்கப்படும் என்று அரச நிர்வாக சேவைச் சங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

[உ-எ]

## சத்யசாயி பாபாவுக்கு ஜே. ஆர். வாழ்த்து!

கொழும்பு, நவ. 30

பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவுக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன பிறந்த நாள் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

இத்தகவலை பிராந்திய அபிவிருத்தி அமைச்சு வெளியிட்டது.

பகவான் பாபாவின் 52 ஆவது ஜயந்தி தினம் சென்ற 23 ஆம் திகதி [illegible] டாடப்பட்டது

அதை ஒட்டி பாபாவுக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன அனுப்பிய வாழ்த்துச் செய்தியில்-

இலங்கையில் அமைதியும் சமாதானமும் நிலவ பகவான் பாபாவின் ஆசியை வேண்டியிருந்தார். (உ-எ)

## கடலில் வீழ்ந்தார்

குருநகர், நவ 30

கடந்த திங்களன்று பாலைதீவுக் கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த குருநகர் மீனவர் ஒருவர் வலிப்புக்கு உள்ளாகிக் கடலில் வீழ்ந்தார் அவரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது

கடலில் வீழ்ந்தவரைத் தேடி குருநகரில் இருந்து மூன்று படகுகளில் பாலைதீவுக்குச் சென்றவர்கள் இச்செய்தி எழுதப்படும் வரை திரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-51)

## பார்வையிட அனுமதி!

யாழ்ப்பாணம் நவ.30

காங்கேசன் துறை புனர் வாழ்வு முகாமில் உள்ள இளைஞர்களை பார்வையிடப் பெற்றோர்களுக்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

கடந்தவாரம் முதல் இதற்கான அனுமதியை அமைதிப்படையினர் வழங்கியுள்ளனர்.

(உ-10)

## இன்று நிறைவு

யாழ். கனகரட்ணம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்று வரும் ஆரம்ப ஆசிரியர்களின் மூன்றுவது குழுவினருக்கான சேவைக்கால முன் பயிற்சி இன்று நிறைவடைகிறது.

## இந்தியா - :,

தது.

27 டெஸ்ட் பந்தயங்களில் இந்தியாவை நியூசிலாந்து தோற்கடித்தது இது ஐந்தாவது தடவையாகும்.

இந்திய மண்ணில் வைத்து இந்தியாவை நியூசிலந்து தோற்கடித்தது இது இரண்டாவது தடவையாகும்.

தற்போதையடெஸ்ட் பந்தயத்தின் இறுதி மோதல் வருகிற வெள்ளிக்கிழமை ஹைதராபாத்தில்ஆரம்பமாகும்.

பெங்களூரில் நடந்த முதலாவது டெஸ்டில் இந்தியா நியூசிலாந்தைத் தோற்கடித்தது தெரிந்ததே. (உ-எ)

## தென்னிலங்கையில்....

(1 ம்பக்கத் தொடர்ச்சி) களில் அண்மையில் இடம்பெற்ற வன்செயல் சம்பவங்களின் போது அரச ஆதரவாளர்கள் ஐவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தென்பகுதியில் நவ சமாஜக் கட்சியின் மாவட்டச் செயலாளர் ஒருவர் நேற்று இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மாத்தறையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இரண்டு சடலங்கள் வீதி ஒன்றில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது.

இதேசமயம் அடுத்த மூன்று வாரங்களில் தீவிரவாதிகள் மேற்கொள்ளவிருந்த மும்முனை சதித்திட்டம் பற்றிய தகவல் கிடைத்து இருப்பதாக அரசு நேற்று அறிவித்தது.

★ முக்கியமான தொழிற்சாலைகள் மற்றும் அரசநிறுவனங்களில் அமைதியின்மையை ஏற்படுத்துவது, தொழிலாளரை வேலை நிறுத்தத்துக்குத் தூண்டுவது ஆகியன தீவிரவாதிகளின் முதற் திட்டம்.

★பிரசைகள் குழுக்கள், பௌத்தமதகுருமார்கள் மற்றும் பிரமுகர்களைப் பயன்படுத்தி மனித உரிமைமீறல் பற்றிப் பிரசாரம் செய்யத் தென் இலங்கைத் தீவிரவாதிகள் முயற்சிக்கின்றனர். — இது இரண்டாவது திட்டம்

★மனித உரிமை மீறல்களைக் கண்டிப்பது என்ற போர்வையில் முழு அளவிலான ஹர்த்தாலை நடத்தி ஜனாதிபதித்தேர்தலைக் குழப்புவது தீவிரவாதிகளின் மூன்றுவது திட்டம். இப்படி அரசு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(உ-எ-ஐ-10)

## தயானுக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி) றும் அரச சட்டத்தரணி சோபித தர்மவர்த்தன தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து தலைமறைவாக உள்ள சகல எதிரிகளுக்கும் மீண்டும் கட்டளை அனுப்பும்படி நீதிபதி அமீர் இஸ்மாயில் உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் எட்டாவது எதிரியாக ஈ. பி. ஆர். எல். எப் இயக்கத் தலைமைச் செயலாளர் திரு.கே. பத்மநாபாவின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (உ-எ)

எங்கள் அன்புத் தெய்வம் சந்திராவிற்கு

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி குருநாதன் தவமணி (சந்திரா)

மலர்வு:- 7- 4- 1959 உதிர்வு:- 13- 11- 1987

திதி; 30- 11- 1988

எங்களைத் தவிக்க விட்டுப்பிரிந்த அன்புத் தெய்வமே! நினைவுள்ளவரை தங்கள் நினைவு எங்கள் இதயக்கடலில் வற்றாத ஜீவநதியாக ஓடிக்கொண்டிருக்கும். அன்பு, அன்பு, அன்பு என்று எங்களைக் காலமெல்லாம் அரவணைத்தாயே, இனி யார் அணைப்பார்? உன் அன்பு வழியில் நாம் நடப்போம். பேதம் இல்லா நெஞ்சினளாய் வாழ்ந்திருந்தாயே, தங்களைப் பிரிக்க இறைவனுக்கு எப்படித்தான் மனம் வந்ததோ? எல்லோருடைய அன்பையும் சுமந்து சென்றாயே, இனி உன் நினைவை நாம் சுமப்போம்.

என்றென்றும் உன் ஆத்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

கணவன், தம்பிமார், தங்கை, மகள்,
மாமன், மாமி
மற்றும் சுற்றத்தார்.

512/7, நாவலர்றேட்,
யாழ்ப்பாணம். (7988)

# மரண அறிவித்தல்கள்

## கிருபாகரன் பிரதீபன்

தாவடியைச் சேர்ந்த கிருபாகரன் திரேச. தம்பதிகளின் புதல்வன் பிரதீபன் (தாவடி இந்து கலவன் பாடசாலை 5 ஆம் ஆண்டு மாணவன், 28 - 11 - 88 ல் அகால மரணமடைந்து விட்டார். இவர் தவதீபன், சத்திபதீபன் ஆகியோரின் சகோதரன் ஆவார் ஈமக்கிரியைகள் 29 - 11 - 88ல் தாவடியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உறவினர்கள் நண்பர்கள் ,ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கிருபா (தந்தை)

சக்தி போட்டோ,
தாவடி. (7994)

## சிதம்பரப்பிள்ளை சின்னையா

(பிரபல கார்ப் புறோக்கர்)

பொன்னாலையைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சின்னையா காலமானார். இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் கோமதி, பானுமதி, வளர்மதி, சண்முகதாசன், அழகுமதி ஆகியோரின் அன்புத்தந்தையும் கருணானந்தனின் அன்பு மாமனாரும் காலம் சென்ற சதாசிவம் (மலேசியா), காலம்சென்ற சோமசுந்தரம் (உடுப்பிட்டி), பரராசசிங்கம் சின்னம்மா (மலேசியா), திபாகராசா கனகம்மா (பொன்னாலை) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பொன்னாலை மயானத்திற்கு 30-11-88 காலை 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

பொன்னாலை [7995]

## திருமதி தருமநாயகி நவரத்தினம் B.A

திருமதி தருமநாயகி நவரத்தினம்- ஆசிரியை (செங்குந்த இந்துக்கல்லூரி) 29-11-88 அன்று காலமானார். அன்னார் திரு. தி. நவரத்தினம், (உப அதிபர், யா/செங்குந்த இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புப் பாரியாரும், சுரபி, தர்ஷினி, (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) சஞ்சீவ், (யா/ இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-11-88 புதன்கிழமை மத்தியானம் 12 மணியளவில் 69, செங்குந்த வீதி இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகச் செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: தி- நவரத்தினம்

(7759)

## திரு சபாபதிச் செட்டியார் கந்தையாச் செட்டியார்

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு சபாபதிச் செட்டியார் கந்தையாச் செட்டியார் அவர்கள் 22.11.88 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற வள்ளியம்மை ஆச்சியினுடைய அன்புக்கணவரும்,ஆறுமுகம் கதிரவேலு(ஸ்தலஸ்தாபன அமைச்சு), பஞ்சாட்சரம்(அரசாங்கஓய்வூதியர்),மகேஸ்வரி ஆகியோரின் தந்தையும், இராசநாயகம் (U.K), காலஞ்சென்ற வள்ளிபம்மை, பரமேஸ்வரி, செல்வராணி ஆகியோரின் மாமனாரும், ரி. பத்மநாதன்(U.K), சி.பத்மநாதன்(இலங்கை வங்கி), என்.சுந்தரலிங்கம் (நில அளவையாளர் மகாவலித்திட்டம்), போகராணி(U.K) நிர்மலா, பத்மா, சியாமளா, சண்முகதாஸ் (சவூதி அரேபியா), மாலினி, தேவராசா (குவைத்) கௌரி, பாலகுமார், நந்தகுமார் சிறீக்குமார் (U.K), வசந்தி(U.K), பகீரதன் (U.K), ஆகியோரின் பேரனும், லதா (U.K), அஞ்சலா (U.K), மகிழன், திவ்யா, அகிலன் சுஜந்தன், சுஜீவன், சதுர்ஷன் (U.K), ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23 11 88 புதன்கிழமையன்று கொக்குவில் மயானத்தில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில் அம்மன் கோயிலடி, தகவல்:
கொக்குவில் கிழக்கு, பிள்ளைகள்,
கொக்குவில். மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(7754)

## செல்வன் அமிர்தலிங்கம்

[கொடி, நிமால், சந்துரு]

கல்வியங்காட்டைச் சேர்ந்த செல்வன் அமிர்தலிங்கம் கடந்த21-11-88இல் மரணம் அடைந்தார். ஈமக்கிரியைகள் 22-11-88இல் நடைபெற்றது. உரிய நேரத்தில் தகவல் கொடுக்க முடியாமைக்கு வருந்துகின்றோம். உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு மு செல்லையா குடும்பத்தினர்.
G. P. S Road,
கல்வியங்காடு. (C/820)

## சுப்பிரமணியம் செல்லத்துரை

யாழ்ப்பாணம் கச்சேரி குடிசைக் கைத்தொழில் மேற்பார்வையாளரான இளைப்பாறிய சுப்பிரமணியம் செல்லத்துரை 28-11-88-இல் காலமானார். இவர் செல்லப்பாக்கியத்தின் அன்புக் கணவரும், குகன் (ஜெர்மனி) அன்புத் தந்தையும் டாக்டர் சுசிலா (ஜேர்மனி) அன்பு மாமனாரும் காலம் சென்றவர்களாகிய பொன்னுத்துரை, சண்முகம். சின்னத்துரை, பொன்னம்மா, மற்றும் இரத்தினம்மா, செல்லம்மா ஆகியோரின் சகோதரரும் இரத்தினம், மகேஸ்வரி, மற்றும் காலம்சென்றவர்களாகிய செல்லத்துரை, வேலுப்பிள்ளை, இராஜசூரியார் ஆகியோரின் மைத்துனரும் காலம்சென்றவர்களான செல்வரெட்ணம், முத்துக்குமாரு மற்றும் அழகரெட்ணம் ஆகியோரின் சகலனும் காலம் சென்றவர்களான அன்னம்மா, இராசம்மா மற்றும் புஸ்பதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

'குபேரபுரி' தகவல்:
உடுவில் றோட், செ. அழகரெட்ணம்
மானிப்பாய். [7996]

## ராஜசேகரம் அகஸ்ரின் செல்வராஜா (ஜம்பு)

(பொலிஸ் உத்தியோகத்தர்)

கோப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட ராஜசேகரம் அகஸ்ரின் செல்வராஜா (ஜம்பு) (பொலிஸ் உத்தியோகத்தர்) காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொ. ராஜசேகரம் திருமதி கமலம் ராஜசேகரம் அவர்களின் அன்புமகனும், கமலராஜன் (டாக்டர் U K). புஸ்பராஜன் (பொலிஸ் உத்தியோகத்தர்), நேசராஜன், செல்வராணி, யோகராஜா (S T. I புகையிரத திணைக்களம்), ஆனந்தராஜன் (U.K), கமலராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், புஸ்பராணி (U.K). திருமகள், முத்துக்குமாரசாமி (C O), யசோதினி (பாங்கொக்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 30. 11 1988 இன்று 2, 30 மணியளவில் கோப்பாய் மரியன்னை ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி நிறைவேற்றப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்,
யோகராஜா.

## சிவபாதம் கிறஷர் - புத்தூர்

### இன்று இருபதாவது ஆண்டு நிறைவு

சோதனைகள் பல கண்டோம்; வேதனைகளுடன் கழித்தோம்;
நாம் நினைத்தபடி சாதனைகள் செய்யமுடியவில்லை!

எமது அச்சுவேலி கிறஷரை யாழ் — பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து பட்டுவில் றோட்டில் முதலாவது கட்டைக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும் தெரியப்படுத்துகின்றோம்.

— உரிமையாளர்

(7850)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2. இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 30 11 1988 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Wednesday 30th November 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org